ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:



# கல்யாணி மாலை.

திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்க வெளியீடு-62.

இது

ஸர்வமங்கள ஜயவாண்டு மேடத்திங்கள் மூவொன்பதாம் நன்னாள் (9–5–1954) ஆதிவாரம் புஷ்ய நக்ஷத்திரம் கூடிய சுபயோக சுபதினத்தில் உதயாதி நாழிகை $\frac{3}{4}$-க்குமேல் $5\frac{1}{2}$-க்குள் (6-45 to 8-45 a. m.) வ்ருஷப லக்னத்தில்

| | |
|---|---|
| ஸ்ரீ உ. வே. நடாதூர் S. K. சுந்தர ராஜாசாரியார் ஸ்வாமி பௌத்ரியும் ஸ்ரீமான் S. கிருஷ்ணமாசாரியார் அவர்களின் கனிஷ்ட குமாரத்தியும் ஆன ஸௌபாக்யவதி **கல்யாணிக்கும்** | ஸ்ரீரங்கம் வடக்கு சித்திரை வீதியில் உள்ள ஸ்ரீமான் வாங்கல் S. கோபாலய்யங்கார் அவர்கள் ஜ்யேஷ்டபுத்திரன் சிரஞ்சீவி **ஸத்ய மூர்த்திக்கும்** |

ஸ்ரீரங்கம் மேலச் சித்திரை வீதி 198 ஆவது நம்பர் திருமாளிகையில் நடைபெற்ற விவாஹத்தில் வழங்கிய

**சந்தமிகு செந்தமிழ்ப்பாமாலை.**

சங்கக் காரியாலயம் :

ஆநந்தபிருந்தாவநம்,

மிகள் மடத்துத் தெரு, அம்பத்தூர்.

9–5–1954.

369

Q22
N54

௳௨௯
N54

ஸ்ரீ:

# உள்ளுறை.

பக்கம்.

முகவுரை. ... 1

[பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி ரெ. திருமலே அய்யங்கார், தமிழ் வித்துவான், காரியதரிசி, திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்.]

திருச்சுகனூர் அலர்மேன்மங்கைத் தாயார் மாலே ... 3

[எதிராஜதாஸர்.]

112768

ஸ்ரீ:

# முகவுரை.

ஆரணஞ்சேர் வில்லிபுத்தூ ருறையூர் வாழ
வவதரித்த நாயகியா ராடி ரூசல்
பேரணிபூ ணழகுடையார் தாமே யென்னும்
பெண்டுகடந் நாயகியா ராடி ரூசல்
நாரணர்பூ ரணர்பெரிய பெருமா ளெங்க
ணம்பெருமா ணாயகியா ராடி ரூசல்
தேரணியு நெடுவீதி புடைசூழ் கோயிற்
சீரங்க நாயகியா ராடி ரூசல்.

—[சீரங்கநாயகியாரூசல், 10.]

ஸ்ரீமானான நாராயணனே பரதத்வம். ஆச்ரயணவேளையிலே "மலர்மகள் விரும்பும் நமரும் பெறலடிகள்" (திருவாய்மொழி 1-3-1) என்று தொடங்கி, போக வேளையிலே "கோல மலர்ப் பாவைக் கன்பாகிய வென்னன்பே" (திருவாய் மொழி 10-10-7) என்று சொல்லுகையாலே, ஆச்ரயண வேளையோடு போக வேளையோடு வாசியற ஒரு மிதுநமே உத்தேச்யம் என்பது தேற்றம்.

திருமாலும் திருமகளும் சேர்ந்தே விளங்கும் திவ்ய தம்பதிகள். பெருமாள் பதி. பெரிய பிராட்டியார் அவன் பத்நீ. பெருமாள் உலகுக்கெல்லாம் பிதா. பெரியபிராட்டியார் உலகுக் கெல்லாம் மாதா. உலகனைத்தும் இவ்விருவர்களின் மக்கள். மக்களாகிய உலகத்துக்கு அன்னையும் பிதாவும் ஆகிய லக்ஷ்மியும் நாராயணனும் ஒக்கவே வழிபடவேண்டியவர்கள்.

அகல் கில்லேன் இறையுமென்று
அலர்மேல் மங்கை யுறைமார்பா!
நிகரில் புகழாய்! உலகம்மூன்
றுடையாய்! என்னை யாள்வானே!

நிகரி லமரர் முனிக்கணங்கள்
விரும்பும் திருவேங் கடத்தானே!
புகலொன் றில்லா அடியேன்உன்
னடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே.
—[திருவாய்மொழி 6-10-10.]

என்ற நம்மாழ்வார் பாசுரம் இவண் அநுஸந்தேயம்.

பிரபந்நவித்வான் எதிராஜதாசர் அநேக பிரபந்தங்கள் இயற்றியுள்ளார். அவற்றுள் ஒன்றுன சேடகிரியந்தாதி "திருமலை மாலை" (57) யாகமுன்னரே வெளிவந்துள்ளது. அவர் "வண்மைத் திருச்சுகனூர் வாழலர்மேன் மங்கைத்தா, யொண்மைத் திருவடிமே லோர்சதமாமுண்மைத்தாஞ் சொன் மாலை" சூட்டியுள்ளார். அவ் "அலர்மேன் மங்கைத் தாயார் மாலை" காப்புச் செய்யுள் ஒன்று நீங்கலாக 100 பாக்கள் அடங்கியது. இத்தோத்திர மாலை "மணிமேவிய" என்று தொடங்கி "அம்மனையே" என முற்றுப் பெற்றுள்ளது. பாட்டுத் தோறும் "அலர்மேல் மங்கை" எனுந் திருநாமம் பயின்று வருவது இச்சீரிய பாமாலை. இது "கல்யாணி மாலை" என்ற திருநாமத்துடன் இச்சங்கத்தின் 62-ஆவது வெளியீடாகப் பிரசுரிக்கலாயிற்று.

இச்சங்கத்தின் பேரபிமானியான ஸ்ரீமான் ஸ்ரீரங்கம் வில்லூர் நடாதூர் கிருஷ்ணமாசாரியார் அவர்களின் செல்வப் புதல்வி ஸௌபாக்யவதி கல்யாணியின் விவாஹத்தன்று இம்மாலை வழங்கப் பெறுவது இதன் தனிச் சிறப்பு.

அந்நற்பந்துமித்திரர் இம்மாலை வெளியிடும் பணியில் எம்மை யேவி அதற்குரிய பூரண பொருள் உதவியும் புரிந்ததற்கு அவர்கட்கு எமது மனமார்ந்த வந்தனம்.

பொங்கும் மங்கலம்
எங்கும் தங்குக.

ஸ்ரீரங்க விலாசம்,
அம்பத்தூர்,
9–5–1954.

ப. ரெ. திருமலை அய்யங்கார்,
காரியதரிசி.

ஸ்ரீ:

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

# திருச்சுகனூர்

# அலர்மேன்மங்கைத் தாயார் மாலை.

## காப்பு.

வண்மைத் திருச்சுகனூர் வாழலர்மேன் மங்கைத்தா
யொண்மைத் திருவடிமே லோர்சதமா—முண்மைத்தாஞ்
சொன்மாலை சூட்டநெஞ்சே தொல்குருகைத் தண்வகுள
நன்மாலை மாறன்ரு ணம்பு.

## நூல்.

மணிமேவிய வாரிதி மகிமாந் தரும்வா னவரும்
பணிமேவிய பாதலரும் பணிநின் பதாம் புயமென்
திணிமேவிய வுட்சிலைபூத் தெந்நாளுந் திகழ்ந் திடச்செய்
அணிமேவிய சுகனூ ரலர்மேன் மங்கை யம்மனையே. (1)

வஞ்சக வல்வினை வித்திட்டு மாயைவண் ணீர்மடுத்து
விஞ்சகங் காரம் விளைத்துப் பிறவி விழுமநல்கும்
நெஞ்சகச் செய்யினின் பத்திப்பைங் கூழ்நிலை நிற்கும்வண்ணம்
அஞ்சகப் புன்களை போக்கலர் மேன்மங்கை யம்மனையே. (2)

காற்றிற் கறங்கு கறங்குத லென்னவெக் காலமும்வீண்
பேற்றிற் றிரியுமென் பேதை மனத்தைநிற் பேணுமன்பாம்
ஊற்றிற் றிளைப்பித் துயர்நியாச நிட்டை யுதவிமுத்தி
ஆற்றிற் செலுத்தி யருளலர் மேன்மங்கை யம்மனையே. (3)

கோற்றே னெழுகும் பொழிற்சுக னூர்வாழ் குலவிளக்கே
காற்றேனு மோர்நிலை நிற்கு மதினுங் கடுகிநெஞ்சங்
கூற்றேயென் வெனைக்கொல்லு மதுசெய் கொடுமை தனை
ஆற்றே னடக்கி யருளலர் மேன்மங்கை யம்மனையே. (4)

அலையேனு மோர்கா லடங்கியு மோர்கா லடங்கலிலா
நிலையேயு மென்னுள நிச்சலு மோர்நிலை நிற்றலின்றிப்
புலையேய் வழியேபுகு மினியா னப்புலைவழி போய்
அலையே னளித்தெனை யாளலர் மேன்மங்கை யம்மனையே. (5)

துன்பக் கடலிற் சுழற்றிச் சுழற்றித் துறுத்திடுஞ்சிற்
றின்பக் கடற்சே யியைநெஞ்சை யென்று மினித்தெழும்பே
ரின்பக் கடற்க ணினிதாடும் வண்ண மிசைவிநல்ல
அன்பக் கயத்தர் தொழுமலர் மேன்மங்கை யம்மனையே. (6)

அலகைச் செயலி னலையுமென் னெஞ்சநின் னன்பர்தமை
உலகைத் திருத்த வுதித்தவ ரென்றுண ராதவர்பாற்
பலகைத் திடுஞ்செயல் பண்ணு மவர்தம் பதப்பெருமை
அலகைத்தெரித்துத் திருத்தலர் மேன்மங்கையம்மனையே.(7)

நவைநவை நெஞ்சக நாடொறுஞ் செய்தலி னண்ணுகின்ற
குவைகுவை யாம்பவக் கூட்டமிவ் வண்டமுங் கொள்ளகிலா
சுவைசுவை யென்றெனைத் தோற்பை யிடுதியென் சொல்குவல்யான்
அவை யவைத் தன்னத டக்கலர் மேன்மங்கை யம்மனையே.
(8)

கடிப்போதில் வாழயன் கற்பம் புசித்துங் கழிவில்பவ
நொடிப்போதிற் செய்யவல தாமென் னெஞ்சத்தி னேன்மை
யென்னே
பிடிப்போ தகநடைப் பெண்ணணங் காமெம் பிராட்டிநின்றன்
அடிப்போ தடைந்தே னருளலர் மேன்மங்கை யம்மனையே.
(9)

அல்லவை செய்தெனக் காகாத தாகி யலையுமனம்
நல்லவை செய்து நலம்பெறு நாளென்று நண்ணிடுமோ
பல்லவை யோர்சொல் சுகாச்சிர மத்துற்ற பார்க்கவியே
அல்லவைத் தன்ன தடக்கலர் மேன்மங்கை யம்மனையே. (10)

குடக்குங் குமமுலைக் கோகன காய்சுக கோப்பதியாய்
கடக்குஞ் சராதி யடக்குவ னல்லகரு மஞ்செய்யத்
தொடக்கும் பொழுததற் கூறுசெய் தேநிற்குந் துட்டநெஞ்சை
யடக்குந் திறமென் னருளலர் மேன்மங்கை யம்மனையே. (11)

விடத்தை முறிக்கு மருந்துண் டெவரும் வியக்கவயத்
தடத்தைப் பொன்னகச் சமைக்குங் குளிகைக டாமுமுண்டு
வடத்தை யிலைவயிற் றெம்பெரு மாட்டியென் வஞ்சநெஞ்சின்
அடத்தை யடக்குவ தென்னலர் மேன்மங்கை யம்மனையே.
(12)

பகத்தையுந் தன்றெழி லால்வென் றெழிலிளம் பாவையர்தம்
பகத்தையுங் கச்சுப் பறம்பையு மெண்ணி யவர்பணைத்தோட்

சுகத்தை விரும்பித் தொலையா நரகத்திற் றுன்னுமென்னுஞ்
சகத்தைத் திருத்தி யருளலர் மேன்மங்கை யம்மனையே. (13)

கனைக்குங் கடற்புவி கண்ணுஞ் சுகப்பதிக் காரணியே
நினைக்குங் கருவி யெனத்தந்த நெஞ்சக நின்னையென்றும்
நினைக்கும் படிநிருமித் தென்னை யின்னுமோர் நேரிழையாம்
அனைக்கும்பி யண்டா தருளலர் மேன்மங்கை யம்மனையே. (14)

சித்துப் பொருளா மெனக்களி நெஞ்செனச் செப்புசட
வத்துப் பொருளென் வழிபடராத வகை யெனைநின்
சொத்துப் பொருளெனக் காத்த னினக்குச் சுகிர்தமன்றோ
அத்துப் பதபங்கய வலர்மேன் மங்கை யம்மனையே. (15)

பந்தமு மோக்கமும் பார்க்கினென் னெஞ்சகப் பண்பினிற்கும்
பந்தமு றுததைப் பக்குவஞ் செய்தநின் பாரமதாங்
கந்தமும் பூவு மெனவெம் பிரான்கட் கலந்திருக்கும்
அந்தமு மாதியு மில்லலர் மேன்மங்கை யம்மனையே. (16)

புனலுறு பங்கத்தை யப்புனல்கொண் டறப்போக் குதல்போல்
உனலுறு முள்ளத்தி னுற்ற நவையையவ் வுள்ளங்கொண்டே
கனலுறு தூசெனக் கண்டரு ளன்பர் கசட்டையருள்
அனலுறுத் தித்துடைத் தாளலர் மேன்மங்கை யம்மனையே. (17)

தடித்தினுஞ் சஞ்சலஞ் சாலவும் வாய்ந்து தகாப்புலனே
பிடித்ததை யேயெண்ணிப் பேராது நிற்கின்ற பேதைநெஞ்சே
வடித்தென் வயநிற்கும் வண்ணஞ்செய் வாயென்றுன் வாயுசநேர்
அடித்துணை யண்டைகொண் டேனலர் மேன்மங்கை
யம்மனையே. (18)

சாத்து விகவகங் காரத்திற் றேன்றியுஞ் சாத்துவிகம்
நீத்து விகடவி ராசத தாமத நேர்ந்தவித்தைக்
கூத்து விகற்பங் கொளுநெஞ்சை நின்னடி கூடிநிற்க
யாத்து விகசிதம் செய்யலர் மேன்மங்கை யம்மனையே. (19)

பத்துப் பொறியையு மாளுந் தலைமைப் பராக்ரமத்தின்
சித்துப் பொருளென் னையுமஞ்ஞ ளுைச்சிந் திக்குமதன்
பித்துப் பொடித்துப் பிரவஞ்ச வாழ்க்கையைப் பேணித்துய்க்கும்
அத்துப் புரவொழித் தாளலர் மேன்மங்கை யம்மனையே. (20)

உபல மனமிவ் வுலகவுளுற்றி லுழைத் துழைத்து
விபல மடைந்த தினியேனு நின்னடி வீழ்ந்திறைஞ்சிச்
சபல முறுமோ வுருதோ வறியேன் றயைபுரிவாய்
அபலமில் லாச்சுக னூரலர் மேன்மங்கை யம்மனேயே. (21)

வியர்த்த வினேயே விரும்பி விரும்பி வேறிலதாய்ப்
பெயர்த்தும் பெயர்த்து மதுதனேயே யென்றும் பேணிநின்று
மயர்த்து மயர்த்து வருந்துமென் பேதை மனத்துக்கென்றும்
அயர்த்த லிலேகொ லருளலர் மேன்மங்கை யம்மனேயே. (22)

அறன்கடை யான தெனநூ லறைய வறிந்திருந்தும்
பிறன்கடை நிற்பவட் பேணி வருந்துமென் பேதைநெஞ்சத்
திறன்கடை யானதித் தீக்குணந் தீர்த்துத் திருமியென்றும்
அறன்கடை யெண்ணு தருளலர் மேன்மங்கை யம்மனேயே.
(23)

நின்னேப் பெறின் மனனே யென்குறையின நேர்ந்தென்செய்யேம்
என்னப் பராங்குச மாமுனி சொற்ற வியலின்மனந்
தன்னேப் பெறிலெற்குன் சாயுச்சிய முத்திதான் கிடைக்கும்
அன்னத் துவசன் றொழுமலர் மேன்மங்கை யம்மனேயே.(24)

நின்புகழ் பாடி நிருத்த மிடநின் னிமலவுரு
இன்புற வெண்ணி யிறைஞ்சிட லாதி யியற்றிடவிப்
புன்புரம் வேண்டலி னன்னதை மொய்த்திடும் புன்கணெலாம்
அன்புட னீக்கி யருளலர் மேன்மங்கை யம்மனேயே. (25)

சூர்ணங் கைத்தரு மந்நோய்க டம்மைத் துடைக்கவொண்ணுக்
காரண முண்டெனி லக்கார ணத்தையுங் கட்டுரையாய்
நாரண னுகத்தி னண்ணுநங் காய்நினே நம்பிநின்றேன்
ஆரணம் போற்றித் தொழுமலர் மேன்மங்கை யம்மனேயே.
(26)

எளியேன் முறைகேட் டிரங்காயெனி னுலகெங் கணுநிற்
கிளியே யியையு மியைந்தாலு நானின்ற னெண்ணின்வணம்
அளியே னெனிலென் னேசெய் வதுவென் னகச்செயலே
அளியேதிரு வுருவாமலர் மேன்மங்கை யம்மனேயே. (27)

ஒல்லி யியற்றினு மொல்லாதென் றேதினு முள்ளநிலே
சொல்லி விடுவனென் றெல்லே வினேயிற் றெடர்ந்தபவ

வல்லி யறுத்தெனே வைகுந்த நாட்டின்கண் வாழவைப்பாய்
அல்லி மலர்க்குழ லாயலர் மேன்மங்கை யம்மனேயே. (28)

கடுங்கால தூதுவர் போல வெருட்டிக் கெடுத்து
நெடுங்கால மென்னை நெருக்கிய நோய்களு நீர்மைகொண்டு
விடுங்காலம் வந்தது வேண்டின னின்னை விளம்பவற்றை
அடுங்கால மிஃதே யருளலர் மேன்மங்கை யம்மனேயே. (29)

சரண வரணப் பெருமை யறிந்த தலைவி நின்னைச்
சரண மடைந்த வெனைக் கைவிடுத றருமமன்றுன்
சரண கமலமென் னெஞ்சக் கமலந் தயங்கவமைத்
தரண மெனநின் றளியலர் மேன்மங்கை யம்மனேயே. (30)

சீர்க்குண யோகஞ் சிறந்த தயாபரை யென்றுசெப்பும்
பேர்க்குரித் தானவளா யெனக்கென்றும் பிராப்பி யையாய்
நார்க்குரித் தானநின் பாலன்றி யென்றன லிவையெல்லாம்
ஆர்க்குரைப் பேனரு ளாயலர் மேன்மங்கை யம்மனேயே.
(31)

நம்பிய வென்னையெந் நாளும் பிணியி னடுநடுங்கி
வெம்பி யழுங்க விடுத லறமென வேண்டுதியேற்
பம்பிய பாவக் கடனின்று மென்னைப் பரிந்தெடுக்கும்
அம்பி யனையவ ராரலர் மேன்மங்கை யம்மனேயே. (32)

சேயின் சிறுமையைத் தீர்த்திடு வானதைச் சேர்ந்தொறுக்கும்
நோயின் றகவுக் கநுகுண முண்டதை நோக்கல்பெற்ற
தாயின் செயலெனிற் றண்ணரு ளாற்சகந் தந்தளிக்கும்
ஆயின் கடனென் னருளலர் மேன்மங்கை யம்மனேயே. (33)

அண்டப் பிணிகுடர் வாத மிருமலுக் காகரமாங்
கண்டக் கபாமயக் காரணந் தன்னைக் கழித்தருள்வாய்
துண்டப் பிறைக்குளத் தாய்சுக னூரெஞ் சுடர்க்கொடியே
அண்டக் குலாதிபன் போற்றலர் மேன்மங்கை யம்மனேயே.
(34)

கபவர்க்க நோய்நெடுங் காலம் வருத்திக் கவற்றுமதைச்
சுபவர்க்கம் யாவுஞ் செயவல்ல நின்னருளாற் றுடைத்தாள்
நிபவர்க்கஞ் சொற்றதை நீக்காவிடுத னியாய மன்றுல்
அபவர்க்க மாக்க மருளலர் மேன்மங்கை யம்மனேயே. (35)

கொடுநோய்க் குவாற்குங் குமைக்குங் குசுமக் கொடுங்கணையான்
விடுநோய்க்கும் வீணே மனத்தை யெப்போதும் விடாதுபற்றித்
தொடுநோய்க்குஞ் சூர்க்கட் சுடுமுகத் தொன்னமன் றூதுவர்வந்
தடுநோய்க்கு மஞ்சா தருளலர் மேன்மங்கை யம்மனையே.
(36)

குற்றஞ் செய்யாதெற் றிருத்தி யென்னுற்பணி கொள்ளுதியேற்
குற்றங்கள் கோடி நினக்குறு மோநற் குலமறைகள்
குற்றங்கள் கூறிடு மோவெனைக் காக்கக் குறித்திருக்கும்
அற்றம் வரவிலை யோவலர் மேன்மங்கை யம்மனையே. (37)

பொறுக்கவொண் ணாப்புரை செய்தாரையு நீபொறுத் தளித்தாய்
பொறுக்கவொண் ணாப்பிழை செய்தவ னென்றெனைப் புந்திதனில்
வெறுக்க விடுக்க விரகில்லை நந்தம் வியனுறவோ
அறுக்கவொண் ணாதுநம் மாலலர் மேன்மங்கை யம்மனையே.
(38)

இப்பவ நீங்கிடி னெப்பவம் வாய்க்கு மெனவறியேன்
இப்பவத் தேநீ யிரங்கி யருளாயெனி னெதிரும்
அப்பவத் தல்லலுக் காற்றே னகமு மழுங்கியஞ்சும்
அப்பவப் பாகொடி தாமலர் மேன்மங்கை யம்மனையே. (39)

அடியே னெடுத்த வயனம னந்தமவற் றிலென்றுந்
துடியேனு நின்னைத் துதித்தில னுகுந் துதித்திருக்கிற்
கடியேய் பிறவி கழியா திராது கவலையுற்றுன்
அடியே யடைந்தே னருளலர் மேன்மங்கை யம்மனையே.
(40)

எடுத்த பிறவிகள் யாவும் பதரா யிருக்கினவித்
தொடுத்த பிறவியின் காலமும் வீணே தொலைந்ததிங்ஙன்
விடுத்தனை யாயினென் செய்குவல் யானென் விதியறியேன்
அடுத்தன னின்னை யருளலர் மேன்மங்கை யம்மனையே.
(41)

அத்திர வின்பத் தடியே னழுந்தியலையச் செய்நின்
மித்திர னென்ன நினக்குமின் றேநினை வேண்டிநிற்கும்
புத்திர வாற்சல் லியமென் வினையைநின் பொங்கருளாம்
அத்திரத் தாலறுத் தாளலர் மேன்மங்கை யம்மனையே. (42)

எத்தனை கால மெளியே னிறைஞ்சி யிரங்கினுமெண்
ணத்தனை யேனுமந் தோவென் றிரங்கி யருளகில்லாச்

சித்தனை நின்கொண் கனையெற் கருளோர் சிறியதனை
அத்தனை செய்யச்செய் வாயலர் மேன்மங்கை யம்மனையே.
(43)

அகிலாண்ட வாவி யளக மதிமுக மாடகநூற்
றுகிலாண்ட சிற்றிடைத் தோகாய் சிறியனைத்
தொண்டுகொண்டாள்
முகிலாண்ட சோலைத் திருச்சுகனூர்ச் செம்முளரி மின்னே
அகிலாண்ட நாயகியே யலர்மேன் மங்கை யம்மனையே. (44)

மோகத்தி லிச்சை யிலனு யடியன் முரணவித்தைத்
தூக்கத் திருக்கின் றனனந்த விச்சையைத் தோன்றுவித்தெற்
காக்கத் திருவுளங் கொள்வாய் சுகப்பதிக் கற்பகமே
ஆக்கத் திருமக ளேயலர் மேன்மங்கை யம்மனையே. (45)

என்னே யென்சைதந் நியமோக்க விச்சை யெழாமலன்றே
கொன்னே கழிந்தன் றிதுகாறுங் கோகன காதனம்வாழ்
பொன்னே யதுவினி யேனும் பயன்பெறப் புந்திசெய்வாய்
அன்னே யருட்கட லேயலர் மேன்மங்கை யம்மனையே. (46)

குடும்பத் தைப்பூண் கட்டிக்கொள்ளு மெனக்கதன் கோளறுத்து
விடும்பத் ததியில்லை நீயேநமை யென்றும் விட்டொழியாக்
கடும்பத்த நோக்கிச் சுகப்பதி வாழ்கம லாயதனை
அடும்பத் திரவருள் செய்யலர் மேன்மங்கை யம்மனையே. (47)

நின்னையு நின்னன் பனையும் விதியினி னேர்ந்தடையும்
முன்னைமுத் தத்துவ ஞானமுண் டாக்கி முறைப்படியே
என்னைநின் றெண்ட ரினத்தொடுஞ் சேர்த்தியெல் லாவுயிர்க்கும்
அன்னையெனும் பின்னை யேயலர் மேன்மங்கை யம்மனையே.
(48)

தத்துவ ஞான மடையாத் தமோகுணத் தன்னெனினுந்
தத்துவ ஞானிகள் சார்புறுத் தித்தமி யேனையவர்
சொத்துவ மாக்கி யவரபி மானத்திற் றெண்டுகொண்டாள்
அத்துவ மேனிப்பொன் னேயலர் மேன்மங்கை யம்மனையே.
(49)

விலங்கு பறவை மிகுசட ரேனுநம் விண்டுசித்தர்
இலங்கு மருளினி லெய்தாத முத்தியு மெய்துமென்ப
கலங்குங் கடையனை யன்னேர் கருணையிற் காத்தருள்வாய்
அலங்கு மணியணி யாயலர் மேன்மங்கை யம்மனையே. (50)

பாதவ மாயினு நின்னடிக் கன்புசெய் பண்புடைய
மாதவர் கைதொடின் கண்பார்க்கின் மாயை மயக்கமென
ஓதவ நீங்கி யுயர்வீ டடையு மெனவுரைப்ப
ஆதவர் நேர்குழை யாயலர் மேன்மங்கை யம்மனேயே. (51)

அசித்துற வான்வரு மஞ்ஞான நின்னே யண்டாதவணம்
விசித்தெனே நாடொறும் வீழ்கதி யிற்றள்ளி வீண்பயனே
புசித்திடச் செய்யுமென் செய்கே னதைநின்றன் பொங்கருளாம்
அசித்துமித் தென்றனே யாளலர் மேன்மங்கை யம்மனேயே.
(52)

சொற்றவஞ் ஞானமென் றென்மைக் குணங்களேத் தொட்டழித்து
வெற்றமுற் றென்றும் விவிதப் பிறவியில் வீழ்த்தியங்ஙன்
பெற்றவு ருக்கதி நானென்றெண் ணச்செயும் பெற்றியதை
அற்றென் றுனேயடை வேனலர் மேன்மங்கை யம்மனேயே.
(53)

தேகத்தில் வேறெனு ஞான மெனக்குச் செனித்ததுண்டேல்
ஏகத் தனிமுதல் போகி சுதந்தரனென் றெண்ணுவேன்
பாகத்தப் புத்தியைப் பற்றிடுவாய் பணிப்பா தவத்தான்
ஆகத் துறையம லாயலர் மேன்மங்கை யம்மனேயே. (54)

சேடத் துவமதி சேர்ந்திடு மேலதைத் தீயர்கள்பால்
வீடத் துவா வினியோகித் தென்றும் விபலமுறுங்
கூடத் துவத்தைக் குலேத்தெனே நின்னன்பர் கூட்டநிறீஇ
ஆடத் துவநின தேயலர் மேன்மங்கை யம்மனேயே. (55)

உயிரப காரஞ்செய் தூழிதொ றூழியுண் டாலுமருச்
செயிரனேத் துஞ்செய்து தீப்புலத் தற்பர ணுய்த்திரிவேன்
வயிரவி னேயறுத் தென்னே நின் பாதம் வணங்கச்செய்வாய்
அயிரநற் பாகனே யாயலர் மேன்மங்கை யம்மனேயே. (56)

ஒன்றுமிலா மற்கிடந்த வென்றுூர்த் தசைக்குற் றிரங்கி
நன்றுநின் பாதத்தை நண்ணியுய்வா னல்கிய வுடல்கொண்
டென்றுநின் னுள்ளக் குகப்பாங் கருமமெனேத் துஞ்செய்யா
தன்றின ஞனே னருளலர் மேன்மங்கை யம்மனேயே. (57)

ஆறுக டக்க வருளம்பி பற்றிய தன்கரையை
யேறுத லின்றி யிருங்கட லெய்துவ ரென்னநினக்

கூறுசெய் தேனு முயநின் றிருவுளத் துன்னிமுத்தி
ஆறுந டத்தி யருளலர் மேன்மங்கை யம்மனையே. (58)

பிறவிப் பெருங்கட னீந்தக் கொடுத்தவிப் பிண்டமதைப்
பிறவிப் பெருங்கடற் கேயுட லாக்குமென் பேரவித்தை
அறவிப் பிரமந் தொலைய வருள்செய் யணிச்சுகனார்
அறவிப் பிரர்தொழுந் தாளலர் மேன்மங்கை யம்மனையே. (59)

அநாதியென் றுரணநூ லாதி சொல்லு மவித்தையினுன்
மநாதிசெய் யெண்ணற்ற புண்ணிய பாவ மரபின்வணம்
வநாதி பலபிறப் பும்பிறந் தெய்தவிவ் வஞ்சகனுக்
கநாதிநல் வீடளித் தாளலர் மேன்மங்கை யம்மனையே. (60)

இறந்துமுன் சென்ற வினிச்செல்ப வோரா வியற்கையினுற்
பிறந்த பிறவிக டோறுமுத் தாபப் பெருங்கனலின்
வறந்தன னங்கன் வறந்துஞ் சிறிதும் வருத்தமிலேன்
அறந்தவி ராச்சுக னூரலர் மேன்மங்கை யம்மனையே. (61)

கருப்பஞ் சனன மிளமைநல் யௌவனங் காழ்முதுமை
விருப்பறு சாக்கா டிருளாமவத்தை விளைவித் தென்றும்
உருப்ப உருவற் பரம்பரை யுண்பித் துறைபிறவி
அருப்ப மொழித்தருள் வாயலர் மேன்மங்கை யம்மனையே. (62)

அனந்த வரந்தைகட் காகர மாமய னக்கடலில்
அனந்த விதத்து மழுந்தா வணநீ யனுதினஞ்செய்
அனந்த முயற்சியை யுந்தடுத் தென்னை யலையவித்தை
அனந்த லொழித்தருள் வாயலர் மேன்மங்கை யம்மனையே. (63)

பிறந்த பொழுதுன் கடைவிழி நோக்கினைப் பெற்றிருக்கிற்
சிறந்த நற்சாத் துவிகனுய் விஞ்ஞானச் சிறப்பினனுய்த்
துறந்த நிலையினனுய் முத்திச்சிந்தையைத் துன்னி நிற்பன்
அறந்தலை நின்றவர் போற்றலர் மேன்மங்கை யம்மனையே. (64)

உண்மை மதியுதி யாதாயி னல்வீ டுறுதலில்லை
உண்மை நன்னூலி னுபதேசந் தன்னினவ் வுண்மைமதித்
திண்மை யுண்டாகுமெனச் செப்பு பவச்சி றந்தமதி
அண்மை யுண்டாக வருளலர் மேன்மங்கை யம்மனையே. (65)

112768

சாத்திர ஞானம் பிறத்த லருமை தவத்துயராஞ்
சாத்திய மானது மன்றுப தேசத்த டத்தின்வரு
மேத்திய ஞானம் விளைத்தெனைக் காத்திமுன் மேய்த்துகந்த
ஆத்திர ளானுரத் தாயலர் மேன்மங்கை யம்மனையே. (66)

என்னிலை தேகம் பொறியுள் பிராண னிலங்குபுத்தித்
தொன்னிலைக் கென்றும் விலக்கண மாகுமெ னத்துணிய
இந்நிலை யென்று மெனக்கு விளங்கா தியற்றிநிற்கும்
அந்நிலை நீத்தா ளுதியலர் மேன்மங்கை யம்மனையே. (67)

ஞானந் தனையொழிந் துந்தோன்ற லினெனை ஞானநன்னூல்
ஈனந் தவிர்ந்த சுயம்பிர காசனென வுரைக்கும்
ஏனந் தவிர்ந்தென்று மிந்நிலை நிற்க வெனக்கருள்வாய்
ஆனந்த வாரிதி யேயலர் மேன்மங்கை யம்மனையே. (68)

சுகவுரு வாக விருத்தலி னென்னைச் சுடர்மறைகள்
தகவுரு மானந்தத் தன்மைய னென்னுமத் தன்மையென்றும்
உகவுறு மாயையொழித் தெனக்கந் நிலையுற்று நிற்க
அகமகிழ்ந் தின்னருள் செய்யலர் மேன்மங்கை யம்மனையே.
(69)

எப்போழ் தினும்யா னிருத்தலி னித்திய னிவ்வுடலம்
எப்போழ்துஞ் சேர்தல் பிறத்த லொழித லிறத்தலென்ப
ஒப்போ தரியசுகப் பதியாயிவ் வுடலம் விடும்
அப்போதென் முன்வந் தருளலர் மேன்மங்கை யம்மனையே.
(70)

இருக்கு மிதய கமல விருக்கை யிருந்தெழும்பிப்
பொருக்கெனப் போதல் வருதல் புரிதலிற் போற்றுமெனை
அருக்கனு வென்ப வதைக் கண்டுதேற வருள்புரிவாய்
அருக்கர் பலரொளி யாயலர் மேன்மங்கை யம்மனையே. (71)

மணியாதி யோருழி நின்று மொளியின் மலர்தலெனத்
திணியா ரிதயத் திருந்துந் தெருட்சியிற் றேகமுறும்
பிணியாதியா னன்குதேர்ந்திடும் பெற்றி பிறங்கச் செய்வாய்
அணியார் சுகப்பதி யாயலர் மேன்மங்கை யம்மனையே. (72)

விழியா திகட்குக் கடாதிகள் போல்விளங் காமையினுல்
இழியாப் பொறிகளுக் கெட்டான் வியத்தனன் றென்றுரைப்ப
கழியாத நானிந்தக் காட்சியைக் கண்டு களித்திருக்க
அழியாப் பதவி யருளலர் மேன்மங்கை யம்மனையே. (73)

எண்ணு ரசித்தோ டியையுஞ் சசாதிய மென்றுணர
ஒண்ணு மையிற்ரு ன்சிந்திய னென்றெனை யோ துவராற்
றிண்ணுர்ந்த விந்நிலை தேர்வித் தெனையுண்ட தீநிரயம்
அண்ணுத்தல் செய்ய வருளலர் மேன்மங்கை யம்மனையே.
(74)

சொல்லா ரசித்துப் பொருள்போ லவயவத் தின்ருெகுதி
இல்லா மையினு லவயவ மில்லா னெனவுரைப்ப
வில்லா ருணர்வுரு வேனென்னு மீது விளக்கிடுவாய்
அல்லார் குழன்மணத் தாயலர் மேன்மங்கை யம்மனையே (75)

ஏய்ந்த வசித்தின் விகரிக்கை யின்றி யிருத்தலினல்
வாய்ந்த விகார மிலானென்ப விவ்வுரை வாய்மையதே
தோய்ந்த வெனது சதைகவுருவந் துலங்கச் செய்வாய்
ஆய்ந்தவ ரேத்திப் புகழலர் மேன்மங்கை யம்மனையே. (76)

ஏதிப் படையெரி நீர்வாயு வெய்யிலிவ் வாதியினுற்
சேதித் தலாதிச் செயலென்கட் சேராத் தெளிவுதந்து
நீதித் தரும நிறுத்திநின் பூசனை நிட்டை தந்தாள்
ஆதிக் கமல வணையலர் மேன்மங்கை யம்மனையே. (77)

சாக்கிய ராவியை யவ்வச் சரீரத் தனையதென்ப
தூக்கி னதுமுர ணுகுஞ் சுருதிக்கத் தோமதரி
னீக்கி யெனையா ளுதிநிக மாந்த நிகழ்த்தனந்த
ஆக்கி யையேசுக னுரலர் மேன்மங்கை யம்மனையே. (78)

ஊனுச் சிரய வுடனேடி யென்று முழலுமெனை
ஞானுச் சிரய னெனநவில் வாரதை நன்குரைத்தென்
நானுச் சிரமமு நாம்பி நசிக்கச்செய் நான்மறையின்
ஆனுச் சிரத்துறை வாயலர் மேன்மங்கை யம்மனையே. (79)

வித்தான ஞாதா வெனவெனைக் கூறலின் வேட்கையுறுங்
கத்தாவுந் துய்த்திடும் போக்தாவு மாயினன் கண்ணுமிந்தச்
சத்தான சார விடயத்தைச் சாற்றுதி தாசருள்ள
அத்தாணி யார்ந்துறை வாயலர் மேன்மங்கை யம்மனையே.
(80)

நீக்க வரிய விலக்கண மாகு நியாமியத்தோ
டோக்க முறுதா ரியஞ்சேட மென்னு முவையுளத்திற்

றேக்கிடும் வண்ணந் தெளிந்திடச் செப்புதி தீனசனர்க்
காக்க மளித்தருள் செய்யலர் மேன்மங்கை யம்மனையே. (81)

நன்றுசெய் சேடத் துவத்தொடு ஞாதர்த் துவமடியற்
கொன்றுமி லக்கண மென்றேத் துரைக்கு முரைத்தபெற்றி
நின்று தமிய னினையிக் களேபர நின்றெழும்பும்
அன்று நினைக்க வருளலர் மேன்மங்கை யம்மனையே. (82)

நிலக்க னிலவி நினைநினைப் போரை நிகழ்த்துமுத்தித்
தலக்க னுறுவிக்கத் தண்சுக னூர்வாழ் தலைவியென்றன்
இலக்கண் முற்றுமி லங்கச்செய் தின்னு விடர்ப்பிறவி
அலக்க ணறுத்தருள் வாயலர் மேன்மங்கை யம்மனையே. (83)

ஈட்டுட னெத்தனை கான்முறை சொல்லினு மென்னையென்று
கேட்டுரை யொன்று கிளக்கி னினக்குறுங் கேதமென்னே
காட்டுத னுட்டுதல் வீட்டுத லென்னுங் கருமவினை
யாட்டுடை யாய்சுக னூரலர் மேன்மங்கை யம்மனையே. (84)

பாவிகளிற் றலையாய வெனக்கருள் பண்ண வெண்ணிற்
றுவிக னின்னெடு செய்து தடுக்கச் சமைபவரார்
நாவி கமழ்குழ லாய்நாக வேதண்ட நாயகியே
ஆவிகட் காவி யெனுமலர் மேன்மங்கை யம்மனையே. (85)

திருக்கா ணிலயஞ் சினஞ்சேர் களஞ்சியஞ் சென்மவித்தாஞ்
செருக்கா ணிவேசமென் சிந்தைநின் சேவடி சேரச்செய்தென்
கருக்காணி நீக்கி நின்காற் காணிவாழக் கருணைசெய்தாள்
அருக்காணி யானபொன் னேயலர் மேன்மங்கை யம்மனையே. (86)

ஒண்மையி லெளபாதிகத் தாயுஞ் சேய்க்குற்ற முற்றுரையாள்
கண்மை கருதுவள் காழ்த்தபல் லண்டங்கள் கண்டளிக்குந்
திண்மை பெறுநிரு பாதிக வன்னை செயலிதுவோ
அண்மையி னென்னை யளியலர் மேன்மங்கை யம்மனையே. (87)

பேதைப் பிராகிருதத் தாயுந்தன் சுதன்பெற் றிகளைத்
தாதைக் குஞ்சாற்ற லடன்னு ளடக்கிச் சமித்திடுவள்
கோதைக் குழலப் பிராகிரு தத்தன்னை கொள்கையிதோ
யாதைச் சொலவல்ல னிற்கலர் மேன்மங்கை யம்மனையே. (88)

துன்பிழைத் தாரையுந் தூர்த்தர்க ளென்று துரத்திவிடா
தின்பிழைத் தாயிரக் கக்கட லேநின் னிணையடிக்கட்
கென்பிழைத் தேன்பிழைத் தேனு யினுமென் னிடர்க்கிரங்கி
அன்பிழைத் தாட்கொள் ளுதியலர் மேன்மங்கை யம்
மனையே. (89)

நூக்கலொண் ணுதது சொல்லவொண் ணுதது தூண்டியென்னுற்
போக்கவொண் ணுதது நின்கொண்கன் மாயை புரியுமையல்
காக்கவொண் ணுததிற் கட்டுண் டயர்க்கு மெனைக்கசபன்
ஆக்கவொண் ணுதருள் வாயலர் மேன்மங்கை யம்மனையே.
(90)

போதன் புராரி புரந்தரன் பொன்னுலகோர் தபனன்
சீதன் முனிவர் செயிக்கவொண் ணுததிற லுடைநின்
ணுதன்செய் மாயை நவிலவற் றேுவத னட்பொழிக்க
வாதன் றரமோ வருளலர் மேன்மங்கை யம்மனையே. (91)

முக்குண முள்ளது மோகஞ்செய் விப்பது மொய்ந்நரகும்
புக்குணச் செய்வது போர்ப்பொறி நீத்தவர் புந்தியையும்
நெக்குணச் செய்வதம் மாயை யதுதனை நீக்கவல்ல
அக்குணந் தந்தருள் வாயலர் மேன்மங்கை யம்மனையே.
(92)

ஈதிசெய் நோய்களை முற்றுமொ ழித்தலெ ழிலிலையேற்
பாதிமுக் காற்பங் களவேனும் போக்கப் பரிந்திடுதல்
நீதிய நீதியம் மட்டுஞ்செய் யாதுநி ராகரித்தல்
ஆதிப ராபரை யேயலர் மேன்மங்கை யம்மனையே. (93)

சங்கற்பஞ் செய்யிற் றவருது சங்கற்பஞ் சற்றுமிலை
இங்கற்ப னென்செய்வ னின்ற னிரக்க மிருங்கடலாஞ்
சிங்கற் பகுதிய தன்று மறந்திறந் தீனசனர்க்
கங்கற் பகம்போ லருளலர் மேன்மங்கை யம்மனையே. (94)

சத்திய சங்கற்பை யென்றுநின் ருளிற் சரணடைந்து
நத்திய நாயடி யேனென்ன மொன்று நவையின்றியே
சித்தி யடையச் செயினின் பெருமை செகந்திகழும்
அத்தி யளித்தோ னுரத்தலர் மேன்மங்கை யம்மனையே. (95)

நீவேண்டி நின்னுளத் தேநினைந் தாலந் நிமிடமென்றன்
பாவேண் டியபொருள் யாவையும் பலிக்கும்ப கருங்கற்பக்
காவேண் டுவநல்குங் கம்புரு வாதிக் கடவுணிதி
ஆவேண் டுவநல்கு மேயலர்மேன்மங்கை யம்மனையே. (96)

உடற்சுக முண்மை யுயிர்ச்சுக முன்னையுன வுதிக்குங்
கடற்சுகம் யானென்றுங் கண்டிலனிப் பகல்காறும் பச்சை
உடற்சுகம் வாழ்பொழி லோங்குஞ் சுகப்பதி யுத்தமிநின்
அடற்சுக வீடெய்த லென்றலர் மேன்மங்கை யம்மனையே.
(97)

முற்று வியற்கைப் பொருளுமுண் டோவிம் முழுமகனைக்
கற்றுவென விரங்கிக் காத்துயிர்க் கணங்காக்கு நின்றன்
நற்றுயின் றன்மை யிந்நானிலத் தோர்கண்டு நம்பச்செய்தி
அற்றூர்க் கருந்துணை யேயலர் மேன்மங்கை யம்மனையே.
(98)

சேகர வானவர்சேர் சுகனூருறை செல்வி நற்பாற்
சாகர நந்தனி நின்றனித் தண்ணளிச் சாகரத்தோர்
சீகர நல்கியென் காரியஞ் சித்திக்கச் செய்குணங்கட்
காகர மானவ ளேயலர் மேன்மங்கை யம்மனையே. (99)

வாழ்க திருச்சுகனூர் வாழ்க வையத்து வானவர்கள்
வாழ்க சதுமறை வாழ்க பதின்மர்தம் வண்மறைகள்
வாழ்க வடதிரு வேங்கடத் தெந்தை மலரடிகள்
வாழ்கநந் தாயலர் மேன்மங்கை யென்றுமென் மாமனத்தே.
(100)

அலக்க ணறச்சுக னூரலர் மேன்மங்கை யன்னைபதத்
திலக்கணப் பாவின மாலை யொருசத மிந்தியங்கொள்
புலக்கண நீத்தவி ராமா நுசகுரு பொன்னடிசேர்
விலக்கண னங்க ளெதிராச தாசன் விளம்பினனே.

112768

Kabeer Printing Works, Madras (2522)